**கடுவன பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 11 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கடுவன பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் ரூபா 4,854,827 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பொறுப்புக்களை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகளின் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டு களின் போது செயற்படுத்தப்பட்டிருந்த 04 செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 2,230,859 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | முன்பள்ளி கட்டிடங்கள் சபைக்கு சொந்தமான சொத்துக்கள் அல்லாமையால் 02 செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செலவுகளை மூலதனப்படுத்தி இருக்காததுடன், மீதியான 02 செயற்திட்டங்கள் தொடர்பான செலவுகளை எதிர்காலத்தில் மூலதனப்படுத்துவேன் என அறிவிக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| (iii) சபைக்கு சொந்தமான 04 காணிகள், ஒரு டிரக்டர், 02 டிரக்டர் டேலர், 03 நீர் பவுசர்கள் என்பவற்றின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். | காணி, டிரக்டர் டேலர் மற்றும் 03 நீர் பவுசர் என்பவற்றின் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், பெரிய டிரக்டர் மற்றும் டிரக்டர் டேலரின் உரிமையை உரித்தாக்கிய பின்னர் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வேன். |

**1.4 இணக்கமின்மை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களுக்கான மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளை காட்டக் கூடிய கூற்றொன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டு முதல் விரிவாகச் சமர்ப்பிக் கின்றேன் |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச் குடியசரின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நி.பி. 134(3) | மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப் பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங் களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) நி.பி. 571(3) | இரண்டு வருடங்களை விஞ்சியுள்ள ரூபா 133,881 இற்கான வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங் களின் படி செயற்பட வேண்டும். | வைப்புச் செய்தவர் களுக்கு ஞாபகமூட்டல் அனுப்பப்பட்டதுடன், உரிமைக்காக முன்வராத வைப்புக்கள் 2020 ஆண்டின் போது சபையின் வருமானத் திற்கு எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) நி.பி. 702(3) | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்பம் இடப்படும் உடன்படிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) நி.பி. 1645(ஆ), (இ) மற்றும் 1646 | சபையின் 18 வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தப் பொழிப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் தாமதம் இன்றி சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,709,899 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 19,982,789 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஏனைய வரி | 1,024,000 | 1,281,930 | 1,280,940 | 3,010 | 902,200 | 1,088,533 | 1,086,703 | 2,020 |
| வாடகை | 15,379,000 | 14,604,499 | 14,288,470 | 1,789,867 | 13,462,100 | 12,646,360 | 12,722,807 | 1,481,747 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 758,100 | 1,728,657 | 1,456,157 | 401,450 | 724,050 | 1,217,419 | 1,218,119 | 48,950 |
| ஏனைய வருமானங்கள் | 25,928,150 | 33,478,198 | 25,528,311 | 50,354,719 | 17,508,800 | 31,958,936 | 21,467,516 | 43,245,392 |
| மொத்தம் | 43,089,250 | 51,093,284 | 42,553,878 | 52,549,046 | 32,597,150 | 46,911,248 | 36,495,145 | 44,778,109 |

**2.2.2 வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை 2014 ஆம் ஆண்டின் போது 08 பிரதேசங்களை முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என இனங்கண்டிருந்த போதிலும், வீதவரி வர்த்தமானியில் பிரசுரித்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதவரி விதித்தல் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரித்தல் ஆகியவற்றிற்காக கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான 21 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 377,400 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடை வாடகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை தொகையில் ரூபா 115,550 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் நிலுவை யாகக் காணப்படும் ரூபா 261,850 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய வாகன வாடகை ரூபா 1,298,957 தொகை காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 913,307 தொகை 05 வருடங்களை மிகைத்தவை ஆகும். | நிலுவை வாடகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகையில் ரூபா 368,436 தொகை யினை பதிவழிப்பதற்கு ஆளுனருக்கு அறிவிக்கப் பட்டுள்ளதுடன், மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மித்தெனிய வாகனத் தரிப்பிடத்தை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 106,750 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆம் ஆண்டு தொடர்பாக பெற வேண்டிய இந்த நிலுவைத் தொகை யில் பாதுகாப்பு பிணை கழித்த பின்னர் ரூபா 90,750 தொகையாகும். அதனை அறவீடு செய்வதற்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

### 2.2.4 அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் அறிவித்தல் பலகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 373,250 மற்றும் கடந்த ஒரு வருடத்தில் பெற வேண்டிய வியாபார அனுமதிப்பத்திரக்கட்டணம் ரூபா 28,200 தொகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டண வருமான த்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை அறிவித்தல் பலகைக் கட்டணத்தில் ரூபா 149,500 தொகை அறவிடப்பட்டதுடன், நிலுவை வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணத்தில் ரூபா 13,150 தொகை வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டமை யால் பதிவழிப்பதற்காக ஆளுனருக்கு அனுப்பப் பட்டுள்ளதுடன் மீதித் தொகையை அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,955,283 தொகை மற்றும் ரூபா 42,423,866 தொகைக் காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு பிரதான செயலாள ருக்கு அறிவிக்க வேண்டும். | பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தில் ரூபா 3,500,000 தொகை அறவிடப்பட்டுள்ள துடன் நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்துக்காக உரிய நிறுவனங்களிடம் விண்ணப்பித்துள்ளளேன் என அறிவிக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை 29 விடயங்களுக்காக மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தன. | துணை விதிகளை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தென் மாகாண அங்கீகரிக் கப்பட்ட துணை விதிகளில் 29 துணை விதிகளை தழுவி இருந்ததுடன், விளம்பரப் பலகை தொடர்பாக இலக்கம் 520/7 மற்றும் 1988.08.23 திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் 37 ஆவது துணை விதியை தழுவியுள்ளேன் என அறிவிக்கின்றேன். |

### (ஆ) எதிர்பார்த்த இலக்குகளை நெருங்கியிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கீடு மேற்கொண்டிருந்த ரூபா 5,618,533 தொகை பெறுமதியான 42 செயற் திட்டங்களை செயற்படுத்தாமல் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்காத 08 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,921,115 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டு இருந்தது. | பாதீட்டில் உட்படுத் தப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக கவனம் செலுத்தப்பட வேண்டும். | பாதீட்டில் உட்படுத்தப் பட்டிருக்காத மூலதனச் செயற்திட்டங்கள் உரிய காலத்தில் தேவையின் மீது மேற்கொள்ளப்பட்டன. |

### (இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்வதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளக்க வேண்டும். | நான்காண்டுத் திட்டத்தில் நீண்ட காலத்திட்டம் ஒன்று தயாரித்திருக்காததுடன், 2021 ஆம் ஆண்டிற்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடையக் கூடிய விதமாக நான்காண்டுத் திட்டம் தயாரிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் 05 நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மாதாந்த சராசரி மிகைப் பணத்தின் கூட்டுத்தொகை ரூபா 3,995,221 தொகையினை ஆக்கபூர்வமான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடைமுறைக் கணக்களில் காணப்படும் மிகைப் பணத்தை முதலீடு செய்து வருமானம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நாளாந்த ஊழியர்களுக்கு சம்பளம் செலுத்துதல், நிறைவேற்றப்பட் நிர்மாண வேலைகளின் சிட்டைகளைத் தீர்த்தல் மற்றும் அவசர அனர்த்த நிலைமைகளுக்காக பணம் பெற்றுக்கொள்வதற்கான வசதி இன்மை ஆகிய காரணங்களினால் பண மீதி வைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடந்த ஆண்டுகளின் போது 05 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 8,745,000 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெற வேண்டிய ரூபா 200,000 இற்கான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன் மீதி நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக இணக்க சபைக்கு அறிவிப்பேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 07 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் 26 மிகைகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் மிகைப் பதவிகளை முறைப் படுத்துதல் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு வெற்றிடம் நிரப்பப்பட்ட துடன் மீதியான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் இணைப்பு 01 படிவத்தின் படி ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கையொப்பமிட்டிருக்காததுடன் இணைப்பு 02 படிவத்தின் படி மீளாய்வாண்டிற்காக மனிதவளத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி குறிப்பிட்ட உடன்படிக்கை மற்றும் திட்டங்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயலாற்றல் உடன்படிக்கை மற்றும் மனிதவள திட்டம் எதிர்காலத்தில் தயாரிப்பேன். |

**(ஆ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உத்தியோகத்தர் 11 பேரிடம் அறவிடப் பட வேண்டியிருந்த ரூபா 1,600,289 தொகைக்கான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடப்பட வேண்டிய மீதியில் விழா முற்பணம் ரூபா 25,000 விஷேட முற்பணம் ரூபா 8,000 மற்றும் இடர்கடன் 1,542,689 தொகை அறவீடு செய்யப் பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மித்தெனிய சிறப்புச் சந்தை கட்டிடத் தொகுதியின் 09 கடைகள் மக்கள் வங்கிக்கு வாடகைக்கு கொடுப்பதற்காக கையொப்பமிடப் பட்டிருந்த உடன்படிக்கையின் செல்லுபடியாகும் காலம் கடந்த ஆண்டு முடிவடைந்திருந்த போதிலும் அதற்காக புதிதாக உடன்படிக்கை மேற்கொண்டு வாடகையை திருத்தி இருக்காமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை இழந்துள்ளது. | உடன்படிக்கைக் காலம் முடிவடையும் போது உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருத்தமான உடன்படிக்கை நிபந்தனைகளின் கீழ் உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 வாகனப் பராமரிப்பு மற்றும் திருத்தங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட துடன், அவற்றை திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களை திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரையை பெற்று தொடர் நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுபைக்கு சொந்தமான 04 வாகனங்கள் மற்றும் 57 மயானங்களின் உரிமையை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாகனம் ஒன்றின் உரிமையை உரித்தாக்கியுள்ளதுடன், மீதியான வாகனங்கள் மற்றும் காணிகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.3 விளைவற்ற/ குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2015 ஆண்டின் போது சபைக்கு ஒப்படைத்திருந்த ரூபா 9,984,179 தொகை பெறுமதியான கட்டுவன வாராந்த சந்தைக் கட்டிடம் 05 வருட காலமும் கிரம பஸ் நிலைய கடையறைகள் மீளாய்வாண்டு இறுதி வரையும் விளைவற்றுக் காணப்பட்டது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீர் காணப்படாமை மற்றும் தரையில் கொங்கிரீட் கல் பதிப்பதில் தாமதம் ஏற்படல் ஆகிய காரணங்களினால் சந்தை கட்டிடத்தை திறக்க முடியாமல் போனதெனவும், பஸ் நிலையக் கடைகள் பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக கடிதங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும் அறிவிக்கின்றேன். |